**தலைப்பு 328 – மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்டு அந் திக் கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிச் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கும் போது முற்பணம் 'பீ' கணக்குடன் தொடர்புடைய திறைசேரி பதிவுகளில் வரவு மற்றும் செலவு பதிவுகளை கவனத்தில் எடுக்காமையால் ஆண்டிற்கான வரவு ரூபா 963,361 தொகை மிகையாகவும் ஆண்டிற்கான செலவு ரூபா 699,637 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் சரியாக நிதி செயலாற்றல் கூற்று தயாரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முற்பணம் 'பீ' கணக்கின் கீழ் ஆன நாட்குறிப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த வரவு மற்றும் செலவுப் பதிவுகளை கவனத்தில் எடுக்காமை இதற்கு காரணமாக இருந்தது. எதிர்காலத்தில் சரியாக உட்படுத்துவதற்கு குறித்துக்கொண்டேன். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமை மீதான கூற்றில் தேறிய சொத்துக்கள் ரூபா 258,082 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரித்து சமர்ப்பிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவ் வித்தியாசத்திற்கான காரணம் நிதி நிலைமை மீதான கூற்றில் கட்டுநிதி மீதி என ரூபா 258,082 தொகை கீழே காட்டப்பட்டுள்ளது. அதே போல் கட்டுநிதிக் கணக்கின் வருட இறுதியில் தீர்க்கப்பட்டிருக்காத துணைக் கட்டுநிதி மீதி என ரூபா 258,082 தொகை காட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று இடையே மூலதனச் சொத்துக்கள் தனதாக்களின் போது ரூபா 3,697,332 ற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.<br>வித்தியாசத்திற்கான சான்றுகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை சரியாக பதிவு செய்வதற்கு மற்றும் அது தொடர்பான ஆவணங்களை முறைப்பிரகாரம் பேணுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதி செயலாற்றல் கூற்றில் மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் (11) மற்றும் ஏனைய மூலதனச் செலவுகள் (15) இன் கீழ் நிலையான சொத்துக்கள் கொள்வனவு மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | ACA 6 படிவத்தின் படி ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 73,938,806 தொகை எனினும் நிதி நிலைமைக் கூற்றின் படி கடந்த ஆண்டு இறுதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 70,978,466 தொகையாக காணப்பட்டமையால் அந்த இரண்டு கூற்றுக்களின் படி ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் உபகரணங்களில் ஆரம்ப மீதியில் ரூபா 2,960,340 ற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை அறிவுரைகளின் படி நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. | அவ்வித்தியாசத்திற்கான காரணம் ஆரம்ப மீதி (Opening Balance) இன் கீழ் முன்னைய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி தொடர்ந்தும் GIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு வருவதனால் ஆகும். வருட இறுதி அளவில் ஆரம்ப மீதிகளை உட்படுத்துதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வேறு தலைப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆளுக்குரிய சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் உட்படுத்தப்படுவதனால் முறையே செயற்பாட்டுத் தொழில்பாடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 18,652,183 இனால் மற்றும் முதலீட்டுச் தொழிற்பாடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 9,450,644 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்கு சுற்றறிக்கைகள் மூலம் அறிவுறை வழங்கப்பட்டுள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கைகளின் படி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது குறிப்பிட்ட ACA படிவங்களில் தகவல்களை கவனத்தில் எடுத்து செயற்படுவதற்கு குறித்துக்கொண்டேன். |
| (ஆ) | திணைக்களத்தினால் கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கும் போது திணைக்கள கணக்குகளுக்கு மேற்கொள்ளப்பட்ட வரவுப் பதிவுகள் மற்றும் செலவுப் பதிவுகளும் உட்படுத்தப்பட்டு வருட இறுதியில் திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதி நிருபனமாகும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன்படி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டுநிதி சீராக்கல் கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரமும் தயாரித்திருக்கவில்லை. | அரச கணக்கு சுற்றறிக்கைகள் மூலம் அறிவுறை வழங்கப்பட்டுள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக தயாரிப்பதற்கு குறித்துக்கொண்டேன். |

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்துதல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து பேணப் பட்டுவருவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்தப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அம்மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்காக கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019 ஆண்டு முதல் நிதிக் கட்டுப்பாட்டிற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணப்பட்டு வருவதற்கு செயற்பட்டிருந்த போதிலும் அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவுகள் 3.4.3 (அ) மற்றும் (ஆ) | காகிதாகிகள், சஞ்சிகைகள் மற்றும் பிரசுரங்கள் போன்ற விஷேட இனப் பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கக்கூடிய வழங்குனர்களை பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தின் முக்கிய கருமம் ஒன்றான வெளியீடுகளை வெளியிடுவதற்காக அவ்வாறு வழங்குனர்களை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் வெளியீடுகள் வெளியிடுவதற்காக ரூபா 3,269,150 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அடிக்கடி கொள்வனவு செய்யும் பண்டங்களுக்காக வழங்குனர்களை பதிவு செய்வதன் ஊடாக பெறுகை செய்முறையின் வெளிப்படைத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவுகள் 3.4.4 (அ) பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது சஞ்சிகைகள் அச்சிடப்பட்டன. |
| (ஆ) | 1994 ஏப்ரல் 20 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 30/94 இன் பந்தி 5.2.3 | சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த ரூபா 2,885,200 தொகை பெறுமதியான உபகரணங்களின் உரிமையை திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருந்த போதிலும் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி அவற்றை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரச கணக்கு சுற்றறிக்கை அறிவுறைகளின் படி சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த உபகரணங்களின் பெறுமதி CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2019 ஆண்டின் ஆரம்ப மீதி என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கியிருந்த மூலதன ஏற்பாடுகள் ரூபா 35,000,000 தொகையாக இருந்ததுடன், அவற்றில் ரூபா 9,566,117 தொகை அதாவது 27 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. பாதீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப் பட்ட சுற்றறிக்கைகளின் படி சேமிக்கப்படல் இதற்கான காரணம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 06 செலவு விடயங்களில் சேமிப்பு ரூபா 7,435,441 தொகையாக காணப்பட்டதுடன், அவை 40 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அம் மீதிகளுக்கான காரணம் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் செலவு மதிப்பீடுகள் கூடிய அளவு நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சரியாக தயாரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி அனைத்து மூலதனச் செலவு விடயங்களிலும் 25% ஏற்பாடுகள் சேமிக்கப்பட வேண்டியிருந்ததால் அச் சந்தர்ப்பத்தில் சேமிக்கப்பட்டிருந்த ஏற்பாட்டு தொகையின் படி சேமித்தல் மேற்கொள்ளப்பட்டது. அக் காரணம் பொதுவாக மூலதனச் செலவு சேமிப்புகளுக்கு காட்டப்பட்டுள்ளது. |

### 2.2 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் அனைத்து துணைக் கட்டுநிதிகளும் குறிப்பிட்ட ஆண்டு திசெம்பர் 31 திகதியில் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதி ரூபா 258,083 தொகையாகும். | நிதிப்பிரமாணங்கள், தபனக்கோவை மற்றும் திறைசேரி பாதீட்டுச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள அறிவுறைகள் மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் கட்டுநிதிகளை தீர்ப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதி என ரூபா 258,082 தொகை வைத்துக்கொள்ள நேரிட்டது 2019 ஜனாதிபதி தேர்த்தல் கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கொடுப்பனவு மூலம் பணம் வழங்கப்பட்டது. அதற்கான பணம் தேர்தல் திணைக்களத்தினால் கிடைத்த பின்னர் மீண்டும் 2020 பெப்ரவரி மாதம் திறைசேரிக்கு திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செய்பணிகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தொழில் எதிர்பார்ப்போர் 25,864 பேர் திணைக்களத்தில் பதிவு செய்திருந்ததுடன், பதிவு செய்யப்பட்டிருந்த தொழில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 23,266 ஆகும். எவ்வாறாயினும், தொழில் எதிர்பார்போரில் 3,392 தொகை மாத்திரம் தொழிலில் அமர்த்தப்பட்டிருந்துடன், அதன்படி, 2019 ஆண்டில் எதிர்பார்போரை தொழிலில் அமர்த்திய விகிதாசாரம் 13 சதவீதம் ஆகிய குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. கடந்த 5 வருட காலப் பகுதியில் தொழில் எதிர்பார்போரை தொழிலில் அமர்த்திய சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், அதனை அதிகரித்துக்கொள்வதற்கு தேவையான கால ரீதியான நடவடிக்கைகள், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் எடுத்திருக்கவில்லை. | திணைக்களம் நிறுவப்பட்டதன் நிச்சயிக்கப்பட்ட குறிக்கோள் மற்றும் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக செயற்திறனுள்ள ஆக்கபூர்வமான வேலைத் திட்டமொன்று திணைக்களத்தினால் செயற்படுத்த வேண்டும். | எங்கள் தொழில் சேவையை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள், வெற்றிடங்களை நிரப்பியுள்ளார்களா என்ற தொடர்புடைய தகவல்கள் முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்படாமை இதற்கு காரணமாகியுள்ளது. இந்த பதிலளித்தல் உரிய விதத்தில் மேற்கொள்ளப் படுவதற்கு தேவையான தூண்டுதல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 344,470 தொகை செலவிடப்பட்டு தொழில் வழிகாட்டலுக்கு தேவையான தொழில் வல்லுனர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரின் தொழில் விருப்பத் தெரிவு மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பாக வழிகாட்டல் சேவைகள் வழங்கும் குறிக்கோளுடன் அச்சிடப்பட்ட 4 தொகுதிகளைக் கொண்ட 'ஹஸர' சஞ்சிகை 7,746 பிரதிகள் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. | சஞ்சிகளை அச்சிடும் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும் விதமாக அவற்றை தேவையான ஆட்களின் கைகளில் கிடைக்கக்கூடியவாறு திணைக்களம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளும் ஹஸர சஞ்சிகை விநியோகிக்கப்படாதிருந்த போதிலும், தற்போது ஒரு சஞ்சியை தொகுதி ஒன்றால் 200 பிரதிகள் வீதம் 800 சஞ்சிகைகள் தலைமை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு மீதியானவை விநியோகிக்கப்பட்டிருந்தது. |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில் வடிவமைப்பை மேம்படுத்துதல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவினால் 25 மாவட்டங்களுக்காக 2019 ஆகஸ்ட் 31 திகதியளவில் 362 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், இதில் பங்குபற்றிய 12,774 பயன் பெறுவோரில் சுயதொழில்கள் ஆரம்பித்தவர்களின் எண்ணிக்கை 911 மாத்திரம் ஆகும். அதன்படி சுயதொழிலுக்காக ஈடுபடுத்தப் பட்டோரின் வீதாசாரம் 7 சதவீதம் மாத்திரம் காணப்பட்டமையால் சுயதொழில் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றியவர்களில் சுயதொழில்களில் ஈடுபட்டவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்கள் என அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் போதும் இந்த நிலைமை இதற்கு சமமானதாக இருந்தது. இதற்கான காரணங்களை விசாரித்து செயலாற்றலை அதிகரித்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்களம் நிறுவப்பட்டதன் மூலம் எதிர்பார்த்த நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கின்றனவா என உறுதிப்படுத்தும் செயற்திறனுள்ள ஆக்கபூர்வமான செய்முறைகள் ஊடாக தனது சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துதல் மற்றும் சுயதொழில் ஒன்று மேற்கொள்வதற்கு தூண்டுதல் மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு நாள் மற்றும் மூன்று நாட்கள் செயலமர்வுகளின் மூலம் சுயதொழில் நடாத்துவோரை உருவாக்குவதற்கு நடைமுறைச் சாத்தியமாக எடுத்த போது நெருங்குவதற்கு முடியாத இலக்கு ஒன்றென தெளிவாகின்றது. அதன் காரணமாக இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் தொழில் ஒன்று எவ்வாறு ஆரம்பிப்பது, தற்போது காணப்படும் தொழிலை வெற்றிகரமாக முன்கொண்டு செல்வது எவ்வாறு போன்றன தொடர்பாக பயன்பெறு வோருக்கு அறிவூட்டல் அடிப்படையாக மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | மாவட்ட தொழில் சேவை நிலையங்கள் மூலம் தொழில் எதிர்பார்போருக்கு பயிற்சி வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. தொழில் வாய்ப்புக்காக தொழில் எதிர்பார்ப்போரின் தகைமைகள் பொருந்திய போதிலும் அந்த ஆட்களை தொழிலுக்காக தெரிவு செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், அதற்கான காரணம் தொழிலுடன் சேர்ந்த பயிற்சி காணப்படாமை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 25,864 பதிவு செய்யப்பட்ட | திணைக்களம் நிறுவப்பட்டதன் மூலம் எதிர்பார்த்த நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கின்றனவா என உறுதிப்படுத்தும் செயற்திறனுள்ள மற்றும் ஆக்கபூர்வமான செய்முறைகள் ஊடாக தனது சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொழில்வாய்ப்புக்கள் பொருந்திய போதிலும் தொழில் எதிர்பார்போர் சில தொழில்களுக்கு செல்வதற்கு விருப்பக் குறைவு காட்டுதல் மற்றும் ஏனைய காரணங்களும் இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது. அவர்கள் பயிற்சி பெறுவதில் பங்குபற்றுவதற்காக சோம்பல் காட்டுதல் இதற்கு காரணமாகும். தொழில் எதிர்பார்போரின் |

| | | |
|---|---|---|
| தொழில் எதிர்பார்போர்களில் தொழில் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட எண்ணிக்கை 921 தொகையாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. மேலும், பதுள்ள, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கேகாலை, கிளிநொச்சி, மாத்தறை, நுவரஎலிய, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து அங்கத்தவர்கள் எவரும் தொழில் பயிற்சிக்கு தொடர்புபட்டிருக்கவில்லை. | | தொழிற்திறன் உயர்ந்த மட்டத்திற்கு எடுத்து அதற்காக அரச மற்றும் அரச சார்ப்பற்ற பல நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதுடன், 2020 ஆண்டின் போது அந் நிறுவனங்களுடன் ஒன்றித்த நுழைவொன் றிற்கு நெருங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 16 பதவிகள் தொடர்பாக 119 வெற்றிடங்கள் திணைக்களத்தில் காணப்பட்டன. அவற்றில் 53 தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் பதவிகளும், 49 மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும் காணப்பட்டன. தற்போது இருக்கும் அநேகமான தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் 50 வயதை தாண்டிவர்களாக காணப்படல் சேவை நியதிச்சட்டத்தின் சிக்கல்கள் காரணமாக 2000 ஆண்டின் பின்னர் அந்த பதவிகளுக்காக புதிதாக ஆட்சேர்க்க முடியாத நிலைமை ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | திணைக்களம் நிறுவப்பட்ட அடிப்படைக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு தேவையான மனித வளங்கள் திணைக்களத்தில் காணப்படுகின்றனவா என கணக்கீட்டு உத்தியோகத்தர் தொடர்ச்சியாக பரிசோதனை மேற்கொண்டு அத்தியவசிய வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். | பதவிநிலை பதவிகள் மற்றும் இணைந்த சேவைக்குரிய பதவிகளை நிரப்புவதற்காக அந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் தலைவருக்கு அதிகாரம் காணப்படவில்லை என சுட்டிக் காட்டுகின்றேன். அதன் காரணமாக அவ் வெற்றிடங்களை நிரப்பித்தறுமாறு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவிப்பதை தவிர வேறு மாற்றுவழி எம்மிடம் காணப்படவில்லை என கருணையுடன் சுட்டிக் காட்டுகின்றேன். இது தொடர்பாக பொது நிர்வாகச் செயலாளருடன் கலந்துரையாடலும் எம்மால் மேற்கொள்ளப்பட்டதுடன், வெற்றிடங்கள் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் உரிய பிரிவுகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>திணைக்களம் சார் பதவியொன்றாக காணப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர் பதவியாகிய தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் பதவி நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் சேவை நியதிச் சட்டத்தின் படி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு உட்படுத்தப்படும் பதவியொன்றாகும். எனினும், அப் பதவியை சேர்ந்த |

உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உட்படுத்தப்படுவதை விருப்பமின்மையினை வெளியிட்டுள்ளதனால் அந்த 32 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்பதவி திணைக்களம் சார் பதவி ஒன்றாக காணப்படுகின்றது.